# ூசம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 47வது கூட்டறிக்கை 2022.01.11

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 47வது அமர்வு 2022.01.11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 47வது அமர்வுக்கு வரவேற்றவனாக, சென்ற அமர்வில் நாம் இறுதி அமர்வாக இருக்கும் என்று எண்ணிய போதும் நேற்றிரவு கௌரவ அமைச்சர் உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தின் கீழ் அவருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களின் காலங்களை 2023.03.19 ஆந் திகதி வரை நீடித்ததனால் அதற்கிடையில் தேர்தல் நடத்தாவிட்டால் நாம் தொடர்ந்தும் 12 மாதங்கள் இந்தப் பணியை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதனை அறிவித்து,

கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்கள் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளதனால் சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

**தீர்மானம் - 04/47/01**

கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி அவர்கள் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளதனால் அவருக்கு பிரசவ விடுமுறை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே, இந்த அமர்வுக்கு மிகவும் கஸ்டத்தோடு சமூகமளித்ததற்கு காரணம் சென்ற 03, 04 மாதங்களாக சபை அமர்வு உரிய நாளுக்கு நடத்த முடியாமல் இருந்தது. இந்த வருடத்திலும் அது தொடரக்கூடாது என்பதற்காக சுகயீனமாக இருந்தும் இந்த கடமையை முடிக்க வேண்டும் என்ற காரணத்தினால் இங்கு அமர்ந்திருக்கின்றேன். இதை சுருக்கமாக முடிப்பதற்கு உங்களின் உதவியை நாடுகின்றேன்.

முதன் முதலாக ஒரு சந்தோசமான செய்தி ஏறத்தாள 07 வருடங்களாக எடுத்த முயற்சியின் பெறுபேறாக மல்லிகைதீவு கிராமத்திற்கு நீர்வழங்கல் சபை குழாய் இடுவதற்கு பிரதேச சபையின் அங்கீகாரம் கேட்டு வந்திருக்கின்றது. அது உடனடியாக வழங்கப்படும். உண்மையாக இது துரதிஸ்டவசமான விடயம். ஆனால் ஏதோ ஒரு வகையில் இதை செய்வதற்கு முன்னால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் முயற்சிகள் எடுத்தும் அது கைகூடவில்லை. தற்போது அதை ஆரம்பிப்பதற்கு வரைபடத்தையும் அனுப்பி அங்கீகாரம் கேட்டிருக்கின்றார்கள். அது சபையின் அங்கீகாரத்தோடு அளிக்கப்படும்.

சம்மாந்துறைக்கு முழு வசதிகளோடு ஒரு Stadium உருவாக்குவதற்கு உங்களின் அங்கீகாரத்தோடு இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு விண்ணப்பித்திருந்தேன். அது மட்டுமல்லாமல் சென்ற DCC கூட்டத்தில் நான் அதை ஒரு தீர்மானமாக முன்வைத்த போது DCC இன் தவிசாளர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், வீரசிங்க அவர்கள் அதற்கு அங்கீகாரம் மட்டுமல்ல இதற்கு நிதி உதவியை பெற்றுத்தருவதற்கும் நாங்கள் முழு மூச்சாக உதவி செய்வோம் என்ற உத்தரவாதத்தினையும் தந்திருந்தார். அது எல்லாவற்றுக்கும் அமைவாக கௌரவ இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவர்கள் கடிதம் மூலம் இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது எனவும் அறிவித்திருந்தார். நமது காலத்தில் முடியாவிட்டாலும் நமது காலத்தில் ஆரம்பித்து வைத்துவிட்டால் இளைஞர்களுக்கு அது பெரிய ஒரு சேவையாக இருக்கும்.

சென்ற வருடம் நாம் மிகவும் சிக்கனமாக கஸ்டத்தின் மத்தியில் இந்த சபையை நடாத்தி வந்தோம். நீங்கள் பெருமைப்பட வேண்டும் நாம் நமது வருமானமாக வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்த தொகை 89.1 மில்லியன். அதில் 75.7 மில்லியன் இந்தப் பிரச்சினைக்குள் வருமானமாக அடைந்திருக்கின்றோம். அதே போல் மொத்தமாக அரசாங்க கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் பார்க்கும் போது வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்த தொகை 187.2 மில்லியன். நாம் அடைந்த தொகை 164.7 மில்லியன். 90% அடைந்திருக்கின்றோம். ஆனால் செலவீனம் சென்ற வருடத்து

மொத்த வருமானம் 164.7 மில்லியன். நமது மொத்த செலவு 174.4 மில்லியன். ஏறத்தாள 10 மில்லியன் இருப்பில் இருந்து செலவீனம் செய்திருக்கின்றோம். இதை நான் ஒவ்வொரு அமர்விலும் கூறுகின்றேன். நிதி முகாமைத்துவத்தை நாம் அரசியலுக்கு அப்பால் பொதுவாக நிர்வாக ரீதியில் பார்த்து செயற்படுத்தாவிட்டால் இந்த வருடம் கொண்டு போவது இன்னும் சிக்கலான நிலைக்கு வரலாம். உதாரணமாக இந்த வருடம் நாம் மதிப்பீடு செய்திருக்கும் குத்தகை வருமானம் 25.4 மில்லியன். இன்றுவரை எடுக்கப்படாத கடைகளினால் ஏற்படக்கூடிய நஸ்டம் ஏறத்தாள 11 மில்லியன். சென்ற வருடம் எடுத்தும் இந்த வருடம் 05 கடைகள் எடுக்கப்படவில்லை. அதனால் எந்த வருமானமும் இல்லாத ஒரு நிலையில் நமது செலவீனங்களை இயலுமான அளவு கட்டுப்படுத்தி செயற்படுத்துவதற்கு உங்களின் உதவியை நாடியவனாக,

இந்த வருடம் LDSP திட்டத்தின் கீழ் சில நிதி உதவிகள் வரலாம். சில வேளைகளில் வியாழக்கிழமை World Bank Team வருவதாக கூறியிருக்கின்றார்கள். ஏனென்றால் இன்னும் வீரமுனை சிறுவர் பூங்காவும், ஆலையடி Amusement Park உம் அனுமதிக்கப்படவில்லை. அவைகளை பார்ப்பதற்கு அவர்கள் வருவதாக கூறியிருந்தார்கள். அவர்கள் வந்து சென்றதற்கு பின்னர்தான் அதன் உண்மையான நிலைப்பாடு தெரியும். அதைவிட நீடிக்கப்பட்ட காலம் ஒரு வருடமாக இருந்தாலும் எப்போதும் தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படலாம். ஆனால் நாம் ஒவ்வொரு காலாண்டுக்கும் செயற்திட்டத்தை பிரித்து அந்த காலாண்டுக்குள் நமக்கு அத்தியவசியமான செய்யவேண்டியவைகளை இனங்கண்டு செயற்படுத்துவது நல்லது என்று நினைக்கின்றேன்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் - 04/47/02

சென்ற மாதம் 2021.12.01 தொடக்கம் 2021.12.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/47/03

வீரமுனை பொதுநூலகம், வீரமுனை சிறுவர் பூங்கா என்பனவற்றுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கும், அதற்குரிய கொடுப்பனவினை வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/47/04

தற்காலிக அடிப்படையில் கடைமயாற்றும் ஊழியர்களின் சேவைக்காலத்தினை 06 மாதங்களுக்கு நீடிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/05**

நிரந்தர மற்றும் தற்காலிக / ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் மாதாந்தச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/06**

இதுவரை காலமும் சிறு செலவுகளுக்காக சிறாப்பரிடம் வழங்கப்பட்டுள்ள ரூபா 7500.00 சிறு செலவுக்கான கட்டுநிதியினை (Petty Cash Sub Imprest) ரூபா 15000.00 ஆக அதிகரித்து வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/07**

ZA – 5277 இலக்க JCB வாகனத்தின் பின் டயர்கள் மாற்றம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பழைய மார்க்கட் கூரையை புதிதாக மீளமைத்தல். முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் நமது கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களின் மேற்பார்வையில் அது திருத்தப்படும் போது கூரையை திருத்துவதற்கு எந்தவொரு தேவையும் இருக்கவில்லை. ஆனால் தற்போது அடைமழை நேரத்தில் Asbestos Sheet இற்குள்ளால் தண்ணீர் வருகின்றது. 40 வருடத்திற்கு மேலானது. அது கட்டாயம் திருத்தப்பட வேண்டும். அதே நேரம் 02 மில்லியனுக்குள் வந்தால் சபையால் செய்யலாம். இல்லாவிடில் PPA Performance இல் இதையும் சேர்த்து செய்வதற்கு முயற்சி எடுப்போம்.

**தீர்மானம் - 04/47/08**

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இருந்து பயிற்சி பெற வருகின்ற 06 பயிலுநர்களை பயிற்சிக்காக சேர்த்துக் கொள்வதற்கும், சபை நிதியில் இருந்து 04/2017 இலக்க சுற்றுநிருபத்திற்கமைய மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/09**

2022 ஆம் ஆண்டிற்கு தேவையான நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/10**

PPA திட்டத்தின் கீழ் இரண்டாவது Performance Grant ஆக ஒதுக்கப்பட்ட ரூபா 4,957,264.95 இற்கு பழைய மார்க்கட் கட்டட கூரையை புதிதாக மீளமைப்பதற்கும் மற்றும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட Amusement Park இற்கான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பதிலாக அலுவலக நிர்வாக கட்டிடத்திற்கு அல்லது Compost Yard இற்கு Solar Power System ஒன்றினையும் நிறுவுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/11**

LDSP திட்டத்தின் கீழ் வீரமுனை சிறுவர் பூங்காவின் முன்மொழிவு நிராகரிக்கப்படுமானால், அதற்கு பதிலாக மல்வத்தையில் பிரதேச சபைக்கு சொந்தமான நிலப்பரப்பில் வருமானத்தை நோக்கி கலாசார மண்டபம் ஒன்றினை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Digital Bord இற்கு வட்டி இல்லாமல் பணம் கட்டி முடிவுக்கு கொண்டு வருவதற்காக விண்ணப்பித்திருந்தார்கள். இதற்கு நாம் இணங்கவில்லை. வங்கியில் பணம் இருந்திருந்தால் அதற்கு கிடைக்கின்ற வட்டியையாவது கட்டி முடிக்கும் காலம் வரை தர வேண்டும். நமது செயலாளர் கணக்காய்வாளரோடு பேசிய போது அவர்களும் இக் கூற்றை ஏற்றிருக்கின்றனர். இதை சபை முடிவாக எடுத்து நீதிமன்றத்திற்கு அறிவிப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் எதிர்பார்த்த வருமானத்தில் ¼ பங்காவது செலுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதில் ஒரு சிக்கல் என்னவென்றால் அது இயங்கவில்லை. சட்டச் சிக்கல் வந்ததும் அதில்தான். எவ்வளவு வருமானம் வந்திருக்கின்றது என்று உத்தேசமாக சொல்லாலமே தவிர சரியான கணக்கு ஒன்று தெரியாது. கொடுத்த காசை மீளளிக்க வேண்டும் என்பதுதான் நீதிமன்றத்தின் வாதம். இதையும் நாம் வாதாடுவோம்.

நான் இன்று கேள்விப்பட்டேன் பிரதேச செயலகத்திற்கு அறிவித்தல் வந்திருக்கின்றது ஆரம்பிக்காத வேலைகள் ஒன்றையும் செய்ய வேண்டாம் என்று. நமக்கு என்ன வரும் என்பதும் சந்தேகமாகத்தான் இருக்கின்றது. ஆனால் இது ஒரு சவால் மிக்க காலம். இதை ஒற்றுமையாக இருந்து சபையின் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு நீங்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/47/12**

எமது பிரதேச சபையில் அமைக்கப்பட்ட "Power Digital Board" அமைப்பதற்கு செலுத்தப்பட்ட ரூபா 2,407,500.00 ரூபாவிற்கான இழப்பீட்டுக்கு அரச வங்கிகளினால் பெறப்படும் நிலையான வைப்புக்காக 2020 செலுத்தப்படும் வட்டியினை Power Digital Network (Pvt) Ltd இலிருந்து பெறுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை 11 இல் சந்திக்குழந்தையார் சந்தியில் இருந்து வீரமுனை RKM பாடசாலைக்குமான பாதை I Road Project இன் கீழ் செய்யப்படுகின்றது. அதிலும் குறிப்பாக 550 மீற்றர் நீளமுள்ள பாதையில் 430 மீற்றர் அளவில் வடிகான் அமைக்கப்பட்டுள்ளது. மீதியாக 120 மீற்றர் சந்திக் குழந்தையார் சந்தியில் இருந்து போடப்படாத காரணத்தினால் தற்போது மழை காரணமாக பல அசௌகரியங்களை மக்கள் அனுபவிக்கின்றார்கள். எஞ்சிய வேலைத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எமது சபையின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை பொது மைதானத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷர்ரப் அவர்களினால் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நிதி ஒதுக்கப்பட்டு மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த இடத்திற்கு நீர் இணைப்பை பெற்று விளையாட்டு வீரர்களுடைய மலசல தேவைகளுக்கு நிவர்த்தி செய்து தருமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பொது மைதானத்திற்கு நீர் இணைப்பு பெறுவதற்கு சென்ற சபையில் தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

I Road பிரச்சினை ஒவ்வொரு பாதைக்கும் சில இடங்களில் Dish Drain சில இடங்களில் வடிகான். I Road Project இல் வடிகானுக்கு என்று ஒரு ஒதுக்கீடு இல்லை. அதற்குள்தான் சேர்த்து செய்கின்றார்கள். நாம் மழை பெய்கின்ற நேரம் Director ஐ அழைத்து காட்ட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் பேசியது போன்று அந்த வேலைத்திட்டத்தை நானும் சென்று பார்வையிட்டேன். அங்கே Dish Drain பொருத்தம் இல்லாத ஒன்று. 120 மீற்றர் மீதி இருக்கின்றது. PD திரு.தவராஜா அவர்களிடம் பேசிய போது வடிகான் செய்வதற்கு நிதி இல்லை என்று கூறினார். Chief Engineer ஆக இருப்பது திரு. உவைஸ், அவரிடமும் பேசிய போது 50 மீற்றர் கேட்டிருக்கின்றார். ஆனால் தருவதற்கு நிதி இல்லை என்று சொல்லி Ministry Secretary இடம் பேசி அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று PD திரு. தவராஜா அவர்கள் சொன்னார்கள்.

கடந்த வருடம் கோழிக்கரவர் சந்தியில் கல்வெட் செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுவரைக்கும் செய்யப்படவில்லை. இந்த வருடத்திலாவது அதனை செய்வதற்கும், சென்னல் கிராமம் - 02 இல் கபூரியா வீதியிலும் கல்வெட் அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன் அதற்குரிய நிதியை ஒதுக்கி தருமாறும் தீர்மானத்தை எடுக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது உண்மை. ஆனால் தீர்மானம் எடுக்கும் போதே நிதி நிலமையை அவதானித்துதான் செய்யப்படலாம் என்று கூறியிருந்தேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ரா 1ம் வீதியும் மபாஸா வீதியும் சந்திக்கின்ற இடத்தில் உள்ள கல்வெட் சேதமடைந்த நிலையில் இருந்தது. அதற்கான திருத்த வேலைகள் நடைபெறுகின்றது. நான் அதை பார்வையிட்ட நேரத்தில் 05 கொங்கிறீட் துண்டுகள் பொருத்தப்படுகின்றது. அதே நேரத்தில் மீதமாக உள்ள கல்வெட்டின் பகுதி மிகவும் சேதமான நிலையில் கம்பிகள் வெளியில் தெரிந்த நிலையில் இருக்கின்றது. ஆகவே நாங்கள் 05 துண்டுகள் பொருத்தி செப்பனிடுவதன் மூலம் பாலத்தை சீர்செய்ததாக அமையாது. மீண்டும் அது உடையும். அதை நேரடியாக உத்தியோகத்தர்களை அனுப்பி பார்வையிடலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் ஆரம்பத்தில் அதைப்பற்றி சொன்னார். எஞ்சி இருப்பதும் உடைகின்றது என்று சொல்கின்றீர்கள். நாம் போடுவது 9 Inch Block முதல் இருந்தது 04 Inch Block எஞ்சியிருப்பதையும் மாற்றுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தப் பாலம் பணிந்த நிலையில் இருக்கின்றது. அதையும் உயர்த்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உயர்த்தப்போனால் 02 பக்கமும் பீம் போட வேண்டும். முதல் 04 Inch தற்போது 09 Inch போடும் போது அது உயரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ரா 01ம் வீதி முடிவடைகின்ற இடத்தில் வடிகான் உடைந்த நிலையில் இருக்கின்றது. அதையும் செப்பனிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அதே போல் தற்போது மழை காலமாக இருக்கின்றது. புளக் ஜே கிழக்கு 1ம் பிரிவில் உள்ள வீதியில் வடிகான் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் பக்கத்து வீடுகள் நீரில் அமிழ்ந்து தத்தளிக்கின்றது. அவர்கள் பயத்தினால் வீட்டின் முன் வராந்தையில் தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதை நான் சென்று பார்வையிட்டேன். இதற்கு எமது சபை ஊடாக செய்யக்கூடிய வழிமுறைகளை எமது சட்டத்திற்கு உட்பட்டதாக செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/47/13**
ஹிஜ்றா 1ம் வீதி முடிவடைகின்ற இடத்தில் உள்ள வடிகானை திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது ஊரில் மழை பெய்தால்தான் பிரச்சினை. சில இடங்களில் பொருத்தமில்லாத வேலைகளை செய்துவிட்டு நீர் ஓடுதில்லை என்றால் எப்படி செய்வது. தண்ணீர் வருகின்ற வேகத்திற்கு அவ்விடத்தில் ஒரு வளைவு இருக்கின்றது. அவ்விடத்தில் ஒரு வீடும் இருக்கின்றது. மழை பெய்து முடிந்தவுடன் ஒரு பிரச்சினையும் இல்லை. நாம் சென்று அவ்விடத்தில் என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டும். வளவை நிரப்ப இயலாது. நிரப்பினால் வீடு தாழ்வடையும். நீரை எடுக்கவும் இயலாது. இல்லாவிட்டால் மதிலை உடைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தென்னம்பிள்ளை கிராமத்தில் சம்சுடீன் என்பவரின் வீட்டில் கூட இதே பிரச்சினை வந்து அவரின் வீட்டிற்குள் நீர் செல்வதால் மண் அணைத்து வைத்திருக்கின்றார். அதையும் தாண்டி வந்ததனால் பக்கத்து வீடு புரண் வளவாக இருப்பதனால் மதிலை உடைத்து நீரை விடுகின்றார். நான் சொல்ல வருவது சின்ன சின்ன பிரச்சினைகள் சின்ன சின்ன செலவுகளோடு இருக்கின்றது. இதனை சீர்படுத்துவதுதான் எமது சபையின் முக்கியமான கடமையாகவும் கருதுகின்றேன். மேற்படி என்னால் முன்வைக்கப்பட்ட விடயத்தை கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தயவு செய்து நான் கௌரவ உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்வது முதல் நாம் நடைமுறையை உள்வாங்க வேண்டும். மக்கள் பிழையை செய்துவிட்டு நாம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றால் எப்படி நிவர்த்தி செய்வது. சபை அனுமதி இல்லாமல் வீடு கட்டுகின்றார்கள், மதில் கட்டுகின்றார்கள் பின்னர் தண்ணீர் ஓடுதில்லை என்று சொல்கின்றீர்கள். சபை அனுமதியுடன் கட்டப்பட்டு வளவுக்குள் தண்ணீர் நின்றால் அதற்கு சபை பொறுப்பு. இதை நீங்கள் விளங்கப்படுத்த வேண்டும். அவர்களின் முறைப்பாட்டை எடுத்து வருவது நியாயம். ஆனால் அனுமதி எடுத்து கட்டப்பட்டு இருந்தால் தண்ணீர் ஓடுவதற்குரிய வழியை சபை காட்டி இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறிய வீதி சம்மந்தமாக பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும், பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் அதனை பார்வையிட்டுத்தான் இப்போது இருக்கின்ற நிலையை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அபிவிருத்திக்காக நிதியை நாங்கள் கொண்டு வந்தாலும் அதனை எவ்வாறு அமுல்படுத்த வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள். அவர்களின் ஆலோசனைப்படிதான் சகலதும் நடைபெற்றிருக்கின்றது என்பதை குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடிக்கிராமம் 1ம் பிரிவில் 03வது சபையின் போது காசிம்பாவா ஆசியா உம்மா என்பவரின் வேண்டுகோளின் பெயரில் அவருடைய வளவு நீர் ஓடுவதற்கு தடையாக இருக்கின்ற அலியார் சித்தியும்மா என்ற நபரின் வளவின் ஊடாக நீர் வழிந்தோட வேண்டிய நிர்ப்பந்தம். ஏற்கனவே அந்த வளவின் ஊடாக சபையால் குழாய் போடப்பட்டிருக்கின்றது. அதில் மண் அடைத்து தண்ணீர் ஓட இயலாத நிலையில் வடிகான் ஒன்று செப்பனிட்டுத் தருமாறு என்னிடம் கூறிய போது எமது சபையின் ஊடாக அதனை மதிப்பீடு செய்தோம். ஆனால் இப்போது அதை செய்வதற்கு அலியார் சித்தியும்மா என்பவர் தடையாக இருக்கின்றார். அதை கவனத்தில் எடுக்குமாறும், ஹிஜ்ரா 1ம் பிரிவில் பொதுக்கிணறு இருந்த பிரதேசம் முண்டுக்கல் அத்திவாரம் இடிந்து இருக்கின்றது. அதை கொங்கிறீட் ஊடாகத்தான் அதை செய்ய வேண்டும். அதையும் கவனத்தில் எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் உங்களை குறை காண்பது அதில்தான். நான் எத்தனையோ தடவை சொல்லியும் அதை நீங்கள் செய்யவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் செய்யவில்லை, நீங்கள் செய்யவில்லை என்றால் நான் ஒன்றும் செய்வதில்லை. நிர்வாகம்தான் செய்ய வேண்டும். நான் எதை தடுத்திருக்கின்றேன் என்று சொல்லுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தடுத்ததை சொல்லவில்லை. இதை விட முக்கியத்துவம் குறைந்த வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி இருக்கின்றீர்கள். இதற்கு ஒதுக்கவில்லை என்பதுதான் எனது கோரிக்கை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களே, நான் பணிவாக கேட்டுக் கொள்கின்றேன். ஒதுக்கீட்டில் எந்த பாரபட்சமும் காட்டாமல் எவ்வளவோ அரசியல் மாற்றுக் கருத்துகள் இருந்தாலும், நிர்வாகம் செய்வது நான் இல்லை. செயலாளர் மற்றும் அவருக்கு கீழ் உள்ளவர்கள். சபை தீர்மானம் எடுக்கப்பட்டால் அதை செய்விக்க வேண்டிய கடமை செயலாளர் அவர்களுக்கு இருக்கின்றது. சபை செய்யவில்லை என்று இல்லாமல் நீங்கள் செய்யவில்லை என்றால் ஏதோ நான் தடுத்த மாதிரி கூறுகின்றீர்கள். நான் ஒரு காலமும் தடுத்தது இல்லை. இரண்டு சபைகளில் உப தவிசாளர் பயணித்திருக்கின்றார். சபையில் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் நான் அந்த ரீதியில் இயங்குபவன் இல்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் ஆகப் பெரிய பிரச்சினை போதைப் பொருள். போதைப் பொருட்களால் பெற்றோர்களின் கஸ்டம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியடைந்து செல்கின்றது. கலாசாரம் மாறிக் கொண்டே செல்கின்றது. ஆனால் போதைப் பொருட்கள் பிடிபட்டு பாதுகாப்பு படையினருக்கு எடுத்துச் சென்றாலும் மீண்டும் அவர்களை வெளியில் விட்டு அவர்கள் விற்பனை செய்கின்றார்கள். சென்றகிழமை அல் அர்ஷத் பாடசாலை அருகில் 06 இராணுவம் இருந்து இன்னும் 10 வருடத்தினால் சம்மாந்துறை போதைப் பொருட்களால் மூழ்கிவிடும். உங்களது பிள்ளைகள் எல்லாம் அழிந்து போய்விடும், அறிவு மங்கிவிடும் என்று கல்வி இல்லாத மக்களிடம் இருந்து கதைத்து எங்களிடம் வந்து சேருகின்றது. இந்த சபை ஊடாக கட்டாயமாக நம்பிக்கையாளர் சபை, சமூக சேவையில் சிறுவர்கள், பெண்கள், போதைப் பொருட்களுக்குரிய வேலையாட்கள், பாதுகாப்புப் படையைக் கொண்டு சம்மாந்துறையில் போதைப் பொருட்களை நிறுத்த வேண்டும். என்னைப் போல பல பெற்றார்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே இதை எவ்வாறு நிறுத்தலாம் என்று இந்த சபை யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீரமுனை 3ம் பிரிவில் கோயில் குறுக்கு வீதி ஒன்று 57 வருடங்களாக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. அண்மைக் காலமாக நிதி ஒதுக்கப்பட்டு அந்தப் பாதை செய்யப்பட்டு வருகின்றது. ஒரு தனி நபர் அந்தப் பாதைக்கு தடங்கலாக இருப்பதனால் எங்களுடைய சபைக்கு மக்கள் சார்பாக ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கின்றேன். அதன் அடிப்படையில் இப் பாதை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்து ஏகமனதாக நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு வீரமுனை 2ம் வட்டாரம் 09 கிராம உத்தியோகத்தர் பிரிவை கொண்ட பிரிவு. மொத்தமாக 11140 சனத்தொகை இருக்கின்றது. அண்மையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2021, 2022 இல் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 04 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல அந் நிதியைக் கொண்டு முன்னர் வாழ்வாதாரம் கொடுக்க வேண்டும் என்றால் அடிமட்டத்தில் இருக்கின்ற வருமானம் குறைந்த ஒருவருக்குதான் கொடுப்பது. ஆனால் தற்போது ஒரு சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டிருக்கின்றது. எவ்வளவு வருமானம் உள்ளவராக இருந்தாலும் சரி வாழ்வாதாரம் வழங்கலாம் என்று இருக்கின்றது. அதனடிப்படையில் எங்களுக்கு வழங்கப்பட்ட நிதியை பிரித்துப் பார்த்தால் ஒரு தலைக்கு 351.00 ரூபா வருகின்றது. ஆகவே அந்த நிதியைக் கொண்டு எவ்வாறு வாழ்வாதாரத்தை செய்வது என்ற பிரச்சினை இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வாழ்வாதாரம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் என்று இல்லை. இது ஒரு அரசியல் திட்டம். இதில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் 02 மில்லியன். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 04 மில்லியன். வீரமுனை வட்டாரம் 09 கிராம சேவகர் பிரிவு இருக்கின்றது அதனால் 22 மில்லியன். இதில் 40% வாழ்வாதாரத்திற்கு. குழு தீர்மானித்தால் 02 பேருக்கும் கொடுக்கலாம். முன்னுரிமைப்படுத்தப்படுவது என்னவென்றால் ஒரு அமைப்பு உருவாகி அதில் 05 பேருக்கு தொழில் கொடுத்து ஒரு நீண்ட பயணம் செல்லக்கூடிய திட்டம் வைத்திருந்தால் அவர் அரச உத்தியோகத்தராக இருந்தாலும் சரி, கோடீஸ்வரராக இருந்தாலும் சரி அது செய்யலாம் என்றால் பணத்தை கொடுத்து அவரால் 04 பேருக்கு தொழில் கொடுத்து ஊக்குவிக்கலாம். அதை பிரித்து கொடுக்க வேண்டும் என்று இல்லை.

**தீர்மானம் - 04/47/14**
வீரமுனை 3ம் பிரிவில் உள்ள கோயில் குறுக்கு வீதியினை UDA சட்டத்தின் கீழ் பாதைகளின் ஆகக் குறைந்த அகலத்தை மையமாக வைத்து சபை நடவடிக்கை எடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது 04 மில்லியனை கிராம ரீதியாக தலைக்கு 350.00 ரூபா வீதம் ஒவ்வொரு கிராமத்திற்கும் பிரித்து கொடுத்திருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரை 12ம் வீதியில் கடைசியாக பெய்த மழை வெள்ளத்தினால் அதிகமான வீடுகள் நீரில் மூழ்கி இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் அவர்களுக்கும் தொலைபேசி மூலம் கதைத்து இருக்கின்றேன். I Road Project செய்கின்றார்கள். அதில் வடிகான் கட்டப்பட்டு குறையோடு இருக்கின்றது. அதில் தண்ணீர் Overload ஆகின்றது. அதில் மண் அடைத்து இருக்கின்றது. அது துப்பரவு செய்யப்பட வேண்டும். அந்த வடிகானின் அமைப்பும் சரியான முறையில் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் மிக நீண்ட நாட்களாக சொல்லி வந்த எனது பிரதேசத்தில் நான் வாழும் பிரதான பாதை மிகவும் கவலைக்கிடமான விடயம் என்னவென்றால் அந்தப் பாதையும் உடைந்து கம்பிகள் வெளியில் வந்து வாகனங்களின் டயர்களில் குத்துகின்ற அளவுக்கு மிகவும் சேதமடைந்திருக்கின்றது. நான் இந்தப் பாதை சம்மந்தமாக பாதையை செய்வதற்கு கொண்டு வருவதற்கு முன் நின்ற போது இங்கு இருக்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கேட்டபோது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் VC இஸ்மாயில் அவர்கள் கொண்டு வந்து போட்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். மீண்டும் அப் பாதை சம்மந்தமாக கதைக்கும் போது கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் நான் அந்தப் பாதையை போட்டிருக்கின்றேன் என்று சொன்னார். ஒவ்வொருவரும் ஏமாற்றும் போது எனக்குத்தான் ஏச்சும் பேச்சும். ஒரு கனம் வாய்க்காலின் நெருக்கம். மறுகனம் பாதையில் கஸ்டம். உண்மையிலே மனிதன் வாழும் பிரதேசமான அந்த இடம் முன்னர் இருந்தது போல் இல்லாமல் சன நெருக்கம் அதிகரித்து மக்கள் அப் பாதையிலே பயணம் செய்வது கூடுதலாக இருக்கின்றது. அந்தப் பாதை இருக்கும் மோசமான நிலையில் அதை கவனம் செலுத்தாமல் மனிதர்கள் நடமாடாமல் இருக்கின்ற இடத்தில் எல்லாம் பாதை அமைக்கப்படுகின்றது. இந்தப் பாதைக்கான முடிவை யார் செய்வது என்று இந்த சபையிலே எனக்கு தெரிய வேண்டும்.

அத்துடன் 43வது சபை அமர்வின் போது வாய்க்காலின் பாலம் பணிந்து இருக்கின்றது அது கவனம் எடுக்கப்பட வேண்டும் என்று கூறினேன். இன்று வரைக்கும் கவனம் எடுக்கப்படவில்லை. அப் பாலமும் உயர்த்தப்பட வேண்டும். கொச்சிக்காய்தூளர் சந்தியில் உள்ள வடிகான் உடைக்கப்பட்டு மூடப்பட்டிருக்கின்றது. வாய்க்கால் ஓரத்தில் இருக்கும் மக்களுக்குதான் கஸ்டம் தெரியும் என்று இல்லை. பாதையால் செல்லும் பிரயாணிகள் கூட கஸ்டப்படுகின்றார்கள். இந்தப் பாதையை சீரமைப்பதற்கு யார் முன்வாரார்களோ அவர்கள் தவிசாளர் முன்னிலையில் சொல்ல வேண்டும்.

அத்தோடு சந்தோசமான விடயம் என்னவென்றால் எங்களது சம்மாந்துறை பிரதேச சபையின் 47வது அமர்வில் உள்ளூராட்சி மன்ற சம்மேளன உப தலைவராக எங்களது கௌரவ தவிசாளர் அவர்கள் இருக்கின்ற இந்த வேளையில் எங்களது சம்மாந்துறை பிரதேச சபையில் முதற்தடவையில் உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்தில் பெண் உறுப்பினர் தலைவியாக தெரிவு செய்யப்பட்டு மீண்டும் அடுத்த முறையும் பெண் உறுப்பினராக சம்மாந்துறை பிரதேசத்திற்கு எடுத்ததில் பெருமிதம் அடைகின்றோம் என்பதை இந்த இடத்தில் தெரிவித்து, கட்டாயம் அந்தப் பாதைக்கு ஒரு முடிவு தர வேண்டும் என்று மிகவும் கெஞ்சிக் கேட்டவளாக விடைபெருகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்களுக்கு சபை சார்பாக வாழ்த்தியவனாக, கௌரவ உறுப்பினர் சரிபா அவர்களின் குற்றச்சாட்டு நியாயமானது. ஆனால் செய்யவில்லை செய்யவில்லை என்றால் செய்வது எப்படி, நீங்கள் சொன்னமாதிரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் VC இஸ்மாயில் அவர்களும் போட்டிருக்கின்றார்கள். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் போட்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் ஒதுக்கீடு கொடுக்கப்படுகின்ற நேரம் Project ஆக சில அனுமதிக்கப்படுவதில்லை. பாதை ஒன்று இருந்து மீள செய்வதற்கு முன்னுரிமை இல்லை. அதுதான் யதார்த்தம். அவ்விடத்தில் பாதை இருந்தபடியினால் அதற்கு மேல் இன்னுமொரு பாதை போடுவது என்றால் பாதை இல்லாத இடத்தில் போட்ட பின்னர்தான் போடுவார்கள். அதனால்தான் அந்தப் பாதை விடுபட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் காபட் செய்வதற்கு சம்மாந்துறையில் கொந்தராத்துக் காரர்கள் இல்லை. இதுதான் பிரதான காரணம். வெளியூர்களில் மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் செய்வதில் அவர்களுக்கு இலாபம் இருக்கின்றது. அங்கு தடை செய்வதற்கு யாருமில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடம் வளத்தாப்பிட்டியில் ஒரு Project செய்திருந்தேன். பெண்களுக்கான தொழில் திறன்களை மேம்படுத்தல் சம்மந்தமாக 04 நாள் கொடுத்திருந்தோம். அந்த இடத்தில் இஸ்மாயில்புர பெண்களின் அவல நிலையை கேட்டவுடன் மிகவும் மனவருத்தமாக இருந்தது. அந்த வீதிகள் இதுவரைக்கும் எந்த திட்டத்திலும் உள்வாங்கப்படாமல் இருக்கின்றது என்று அம் மக்களின் குற்றச்சாட்டு கிடைத்தது. கௌரவ உறுப்பினர் குலமணி அவர்களும் இருந்தார்கள். இஸ்மாயில்புரத்தில் குடியிருக்கின்ற மக்கள் சம்மாந்துறை மக்களை விட கல்முனைக்குடி, சாய்ந்தமருதில் இருந்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். அந்த மக்களின் கருத்தை உள்வாங்கியவளாக இப் பாதையை சபை ஊடாக புணர்நிர்மானம் செய்து கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று ஒரு முன்மொழிவாக நான் முன்வைக்கின்றேன். இதை சபையால் ஏற்றுக் கொண்டு அதை செய்யுமாறு மிகவும் தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அபிவிருத்திக்கான நிதிகள் நமக்கு செலவளிக்கக்கூடிய சந்தர்ப்பம் வருகின்ற போது நிச்சயமாக இது கவனத்தில் எடுக்கப்படும்.

நான் சென்ற கிழமை கொழும்பில் இருக்கும் போது சிறிய கணக்கீடு ஒன்று செய்தேன். காப்பகத்துக்குள் சென்று நான் செய்த கணக்கு சரியா என்று பார்த்தேன். கிழக்கு மாகாணத்தில் சனத்தொகை பெருக்கம் 1901ஆம் ஆண்டில் இருந்து 2012 வரைக்கும் சிறிய ஆய்வு ஒன்று செய்தேன். 1901 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் இருந்த சிங்கள மக்களின் சனத்தொகை 6699. வீதம் 4.2%. திருகோணமலையில் 547, மட்டக்களப்பில் 6152. மஹாஓயா, பதியத்தலாவ தொடர்ந்தும் மட்டக்களப்புக்கு கீழ்தான் இருந்தது. அது படிப்படியாக மாறி வந்து 1946 ஆம் ஆண்டு திருகோணமலையில் 15705 ஆக மாறியது. மட்டக்களப்பில் 11850. 4.2% வீதமாக இருந்தது 10.2% வீதமாக மாறுகின்றது.

2012 இற்கும் 1946 இற்குமிடையில் உள்ள வித்தியாசத்தை பார்த்தால் பெரும்பான்மையின் சனத்தொகையின் கிழக்கு மாகாணத்தில் 333182 ஆக அதிகரித்திருக்கின்றது. 1209% மாகாணத்திலே அதிகிரித்திருக்கின்றது. மட்டக்களப்பு, அம்பாரையை சேர்த்து 2000% அதிகரித்திருக்கின்றது. திருகோணமலை 546%. எவ்வளவு கவனமாக இந்த அரசு நிர்வாக அலகுகளை உருவாக்கி அதற்குள் பெரும்பான்மையின் சனத்தொகையை கூட்டி இன்றைக்கு திருகோணமலையும் அம்பாரையும் அடுத்த தேர்தலோடு பெரும்பான்மையினத்தை சேர்ந்ததற்குதான் செல்லும். நமக்கு என்ன நடந்திருக்கின்றது என்றால் திருகோணமலையிலும், அம்பாரையிலும் 70% வீதமான காணி பெரும்பான்மையின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றது. அதற்குள் நாம் செல்வதற்கு தயார் இல்லை. ஆனால் 30% வீதத்திற்குள் அவர்கள் எப்போது வரவும் தயார். 1949 ஆம் ஆண்டில் இருந்து கல்லோயா திட்டத்தில் தமிழ் முஸ்லிம் கிராமங்கள் உருவாக்குவதற்கு அரசாங்கம் தயார். அதனால்தான் அம்பாரையில் கோயில், தேவாலயம், பள்ளிவாசல், பண்சல எல்லாம் அரசாங்கத்தால் கட்டப்பட்டது. மட்டக்களப்பில் இருந்து பிரிந்து வந்ததுதான் உஹன. 1963 ஆம் ஆண்டு அம்பாரையில் சிங்கள சனத்தொகை 61996. இன்றைக்கு 252458 ஆகும். நாம் இவைகளைப் பற்றி யோசிப்பதில்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது தந்தையின் மரணச் செய்தி கேட்டு எனக்கு ஆறுதல் வார்த்தை கூறிய கௌரவ தவிசாளர் அவர்களையும், செயலாளர் அவர்களையும் மற்றும் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு நான் சிறிய விடயத்தை கூற விரும்புகின்றேன். எங்களுடைய தமிழ் மக்களினுடைய பண்பாடாக மரண வீட்டில் கண்ணீர் பதாதை வைத்துதான் ஆறுதல் வார்த்தை கூறுவோம். அது என்னுடைய மரண வீட்டில்தான் உணர்ந்தேன். அதன் அடிப்படையில் கண்ணீர் அஞ்சலி பதாதை ஒன்றினை இந்த சபையின் ஊடாக செய்து வழங்க சபையினுடைய அனுமதியை கேட்கின்றேன். கௌரவ உறுப்பினர்கள் மட்டுமல்ல தமிழ் பேசுகின்ற ஊழியர்களும் இருக்கின்ற படியினால் பதாதை கட்டாயம் சபைக்கு தேவை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் வேலை செய்கின்ற வைத்தியசாலையில் உள்ள நலன்புரிச் சங்கத்தின் ஊடாக அந்தப் பதாதை வைக்கப்பட்டது. நான் உணர்ந்ததை தெரிவித்துக் கொள்கின்றேன். மற்றும் எனது வட்டாரத்தில் 03 தீவுகளாக இருக்கின்ற திருவள்ளுவர்புரம், தம்பிநாயகர்புரம், மஜீட்புரம் ஆகிய 03 பிரதேசங்களுக்கும் பெயர்ப்பலகை இல்லை. பெயர்ப் பலகை இல்லாமல் இல்லாததனால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். 02வது அமர்வில் கூட பேசினேன். இதையும் இத் தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/47/15
எமது சபையினால் கண்ணீர் அஞ்சலி பதாதை ஒன்றினை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/47/16**
திருவள்ளுவர்புரம், தம்பிநாயகர்புரம், மஜீட்புரம் ஆகிய பிரதேசங்களுக்கு பெயர்ப்பலகை இடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை